**செய்தி வெளியீடு எண்:155** **நாள்:23.02.2021**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று (23.2.2021) தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் தேனி மாவட்டம், உத்தமபாளையம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டையில் 5 கோடியே 45 லட்சத்து 67 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள வருவாய் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்களை திறந்து வைத்தார்கள். மேலும், 'எங்கிருந்தும் எந்நேரத்திலும்' இணையவழிச் சேவை மூலம் தானியங்கி முறையிலான பட்டா மாற்றம் செய்யும் வசதி மற்றும் புரட்சித் தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டு திட்டம் ஆகியவற்றையும் துவக்கி வைத்தார்கள்.

2019–2020ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் அனைத்துக் குடும்பங்களுக்கும் பயனளிக்கும் வகையில், விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டுத் திட்டம் ஒன்றை இந்த அரசு விரைவில் அறிமுகப்படுத்தும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்கள் பயனடையும் வகையில், குடும்பத்தில் வருமானம் ஈட்டும் நபர் இயற்கை மரணம் அடைந்தால் 2 லட்சம் ரூபாயும், விபத்தால் மரணம் அடைந்தால் 4 லட்சம் ரூபாயும், நிரந்தர உடல் ஊனம் ஏற்பட்டால் 1 லட்சம் / 2 லட்சம் ரூபாய் வழங்கும் வகையில், புரட்சித் தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டு திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று துவக்கி வைக்கும் அடையாளமாக 9 நபர்களுக்கு புரட்சித் தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டுத் திட்ட அடையாள அட்டைகளை வழங்கினார்கள். இதன்மூலம் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் 50,96,675 குடும்பங்கள் பயனடைவார்கள்.

கடலோர மாவட்டமான நாகப்பட்டினம் மாவட்டத்தில் 2004–ஆம் ஆண்டு சுனாமிப் பேரலையால் அதிக அளவிலான உயிரிழப்புகளும், வீடுகள் மற்றும் பொருட் சேதங்களும் ஏற்பட்டன. இந்நிலையில், வீடுகளை இழந்த மக்களுக்கு தமிழ்நாடு அரசின் மூலமாகவும், அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் மூலமாகவும் 16,967 வீடுகள் கட்டிக் வழங்கப்பட்டன.

நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் வட்டம், வடக்கு பொய்கைநல்லூர் கிராமத்தில், "ரயத்து புஞ்சை" என்ற வகைப்பாட்டில் "நாகப்பட்டினம், நகராட்சி ஆணையர்" என்ற பெயரில் உள்ள நிலத்தில் சுனாமியால் மிகவும் பாதிக்கப்பட்ட மீனவ குடும்பத்தை சேர்ந்த 670 நபர்களுக்கு நிரந்தர வீடுகள் தொண்டு நிறுவனங்களால் கட்டி கொடுக்கப்பட்டு குடியிருந்து வருகின்றனர். இவர்கள் குடியிருந்து வரும் நிலம் நகராட்சிக்கு சொந்தமானது என்பதால் பட்டா வழங்கிட இயலாத நிலை இருந்தது. தற்போது நகராட்சிக்கு சொந்தமான நிலத்திற்கு ஈடாக அதே வடக்கு பொய்கைநல்லூர் கிராமத்தில் "அரசு மானாவாரி" என்ற வகைப்பாடுடைய நிலத்தினை நில பரிவர்த்தனை செய்திட மாண்புமிகு அம்மாவின் அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி மீனவக் குடும்பத்தை சேர்ந்த 670 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையால் 25.1.2021 அன்று அரசாணை வெளியிடப்பட்டது.

அந்த அரசாணையின் அடிப்படையில், வருவாய் கணக்குகளில் உரிய மாற்றங்கள் செய்யப்பட்டு சுனாமியால் மிகவும் பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பத்தை சேர்ந்த 670 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிடும் அடையாளமாக, 7 மீனவக் குடும்பங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார்கள்.

பதிவுத்துறையின் இணையவழி மென்பொருளான STAR 2.0 மற்றும் வருவாய்த்துறையின் மென்பொருளான Tamil Nilam ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டு, பத்திரப்பதிவு முடிவடைந்தவுடன் பதிவு விவரங்களை வருவாய்த்துறைக்கு உடனுக்குடன் இணையவழியே அனுப்பிவைத்து, பட்டா மாறுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வசதியினை 12.2.2018 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, உட்பிரிவு செய்யப்படத் தேவையில்லாத நிலப் பரிவர்த்தனைகளில் பத்திரப்பதிவு முடிவடைந்தவுடன் தானியங்கியாக வருவாய்த்துறைப் பதிவுருக்களில் நிலஉரிமை மாற்றத்தினை ஏற்படுத்தி (Automatic Mutation) உடனுக்குடன் பட்டாக்களை eservices.tn.gov.in என்ற ‘எங்கிருந்தும் எந்நேரத்திலும்’ இணையவழிச் சேவைகள் மூலம் நில உரிமைதாரர்கள் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளும் வசதி தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த தானியங்கி முறையிலான பட்டா மாற்றம் செய்யும் வசதியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று

துவக்கி வைத்தார்கள். இதன்மூலம், உட்பிரிவு இல்லாத இனங்களுக்கு காலதாமதமின்றி, நிலப்பரிவர்த்தனை முடிவடைந்த உடனேயே பட்டா கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மக்களைத் தேடி அரசு எனும் சீரிய கோட்பாட்டின்படி, அரசின் மக்கள் நலத்திட்டங்களை ஏழை எளிய மக்களிடையே முறையாகக் கொண்டு சென்று, அரசுக்கும் மக்களுக்கும் பாலமாக விளங்கும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் மேம்பாட்டிற்காக, புதிய வருவாய் வட்டங்களை உருவாக்குதல், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய சொந்தக் கட்டடங்கள் கட்டுதல், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், தேனி மாவட்டம் – உத்தமபாளையத்தில் 2 கோடியே 53 லட்சத்து 67 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வருவாய் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டையில் 2 கோடியே 92 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வருவாய் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ்.பி.வேலுமணி, மாண்புமிகு வருவாய், பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார், தலைமைச் செயலாளர் முனைவர் ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.க. பணீந்திரரெட்டி, இ.ஆ.ப., நில நிர்வாக ஆணையர் / முதன்மைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு. பங்கஜ் குமார் பன்சல், இ.ஆ.ப., நில அளவை மற்றும் நில வரித் திட்ட ஆணையர் டாக்டர் இரா. செல்வராஜ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**